Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.389/2022

**Depositions of PW- 12**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.பவுல் யேசு தாசன் | Occupation | காவல் ஆய்வாளர் |
| Father's name | இருதயராஜ் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 02nd day of April 2026.

02.04.2026

எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

(**காவல் ஆய்வாளர் திருமதி.சிவசக்தி அவர்களுடைய விசாரணையையும் சேர்த்து காவல் ஆய்வாளர் திரு.பவுல் யேசு தாசன் அவர்கள் சாட்சியம் அளிக்க எதிரி தரப்பில் ஆட்சேபணை இல்லை என்று சொன்னதன் பேரில்**)

**முதல் விசாரணை**

நான் தற்போது தூத்துக்குடி மாவட்டம் மாசார்பட்டி காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 2018ம் வருடம் திருவில்லிபுத்தூர் நகர் வட்டக்காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தேன். எனக்கு முன்பு திருவில்லிபுத்தூர் நகர் வட்டக் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த கார்த்திகேயன் இறந்துவிட்டதாலும், காவல் ஆய்வாளர் சிவசக்தி பணிமாறுதலில் சென்றுவிட்டதாலும் இருவரின் கையொப்பம் பற்றி தெரியும் என்பதாலும் வழக்கு கோப்பை பார்வையிட்டு ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 01.07.2018 அன்று 15.30 மணியளவில் வன்னியம்பட்டி காவல்நிலைய சார்பு ஆய்வாளர் கார்த்திகேயன் நிலைய பொறுப்பிலிருந்தபோது மனுரசீது எண்.118/2018 ஐ விசாரணை செய்து அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.78/2018 பிரிவுகள். 341, 294(b), 323, 506(2) இதச மற்றும் 3 of TNPPDL Act ன்கீழ்

முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அசாஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. முதல் தகவல் அறிக்கையின் அசலையும் வாதியின் புகார் மனுவின் அசலையும் நீதிமன்றத்திற்கும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்துள்ளார். பின்னர் வழக்கு கோப்பை மேல்விசாரணைக்காக திருவில்லிபுத்தூர் நகர்வட்டக்காவல் ஆய்வாளர் சிவசக்தி அவர்களிடம் ஒப்படைத்துள்ளார்.

பின்னர் அன்றைய தினமே வழக்கு கோப்பை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட காவல் ஆய்வாளர் சிவசக்தி சம்பவயிடம் சென்று சாட்சிகள் அய்யனார் மற்றும் கருப்பசாமி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடங்களை பார்வையிட்டு பார்வை மகஜர்கள் மற்றும் வரைபடங்கள் தயார் செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **உத்தமராஜா வீட்டின் முன்பு பார்வையிட்டு தயாரித்த பார்வை மகஜர் அசாஆ.5 ஆகவும், வரைபடம் அசாஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. சத்திரப்பட்டி டு வேப்பன்குளம் செல்லும் வழியிலுள்ள மொட்ட மலை அகதிகள் முகாமை பார்வையிட்டு தயாரித்த பார்வை மகஜர் அசாஆ.7 மற்றும் வரைபடம் அசாஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**.

பின்னர் அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவயிடத்தில் கிடந்த கல்லை அத்தாட்சி தயார் செய்த அதன்பேரில் கைப்பற்றியுள்ளார். **அத்தாட்சி அசாஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. **சிறிய கருங்கல் சாபொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இவ்வழக்கு சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளார். **படிவம் 91 அசாஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் இவ்வழக்கின் சாட்சிகளான உத்தமராஜா, கடலாட்சி, வள்ளியம்மாள், மகாலட்சுமி, முருகன், உத்தம்மாள் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் 02.07.2018 அன்று சாட்சி போத்திராஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

பின்னர் காவல் ஆய்வாளர் பணிமாறுதலில் சென்றுவிட்டதால் வழக்கு கோப்பை காவல்நிலையத்தில் ஒப்படைத்துள்ளார். பின்னர் 20.08.2018 அன்று வழக்கு கோப்பை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே வழக்கில் சம்மந்தப்பட்ட வாகனமான TN 67 AT 4369 என்ற பதிவெண் கொண்ட ஆட்டோவை ஆய்வு செய்த திருவில்லிபுத்தூர் மோட்டார் வாகன ஆய்வாளர்கார்த்திகேயன் என்பவரை விசாரித்து

மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட ஆட்டோவின் கண்ணாடி மதிப்புச்சான்று வழங்கிய செந்தில் என்பவரை விசாரித்து மதிப்புச்சான்று ரூ.3500/– பெற்றும் வாக்குமூலம் பதிவு செய்தேன். **மதிப்புச்சான்று அசாஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் 20.08.2018 அன்று இவ்வழக்கின் விசாரணை முடித்து எதிரிமீது பிரிவுகள். 341, 294(b), 323, 506(2) இதச மற்றும் 3 of TNPPDL Act ன்கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

இவ்வழக்கின் புகார்தாரரான அசா.1 இவ்வழக்கின் மற்ற சாட்சிகளின் உறவினர் என்றால் சரிதான். இவ்வழக்கின் எதிரி அசா.1 ன் உறவினர் என்றால் சரிதான் அவர்கள் இருவரும் சகோதரர்கள் ஆவார்கள். புகார் மனுவில் நேரம் மற்றும் தேதியில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நேரம் போன்றவை சேர்க்கப்பட்டுள்ளது. புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையில் எந்த இடத்தில் வைத்து மிரட்டினார்கள் என்பது பற்றியும் எந்த இடத்தில் வைத்து பேருந்தின் கண்ணாடி உடைக்கப்பட்டது என்பது பற்றியும் குறிப்பிட்டு கூறப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி புகார்தாரர் மீது எதிரி கொடுத்த புகாரின் அடிப்படையில் மேற்படி காவல்நிலையத்தில் புகார்தாரர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இவ்வழக்கின் எதிரி தான் சம்பவத்தில் ஈடுபட்டார் என்று அடையாளம் காட்டிய நபரை இவ்வழக்கின் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் அதுபற்றி எதிரியை கைது செய்து விசாரணை மேற்கொண்ட அதிகாரிக்குத்தான் தெரியும். மேற்படி வாகனத்தை ஓட்டிச்சென்ற நபரை நான் விசாரணை செய்தேனா என்றால் புகாரிலேயே புகார்தாரர் தனது வண்டியை மறித்து எதிரி கல்லை எறிந்ததாக குறிப்பிட்டுள்ளார். மேற்படி பேருந்தை பயணிகள் யாரும் பயணித்தார்களா என்பது பற்றி விசாரணை செய்தேனா என்றால் சாட்சி முருகன் என்பவரை முதற்கட்ட புலன் விசாரணை மேற்கொண்ட சிவசக்தி என்பவர் விசாரித்துள்ளார். இவ்வழக்கின் பார்வை மகஜர், வரைபடம் மற்றும் அத்தாட்சி போன்ற ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு இவ்வழக்கிற்காக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி சேதமதிப்பு சான்றிதழ் வழங்கிய நிறுவனமானது பதிவு செய்யப்பட்ட நிறுவனம் என்பது பற்றி பதிவெண் எதுவும் சேதமதிப்பு சான்றிதழில் குறிப்பிடப்படவில்லை என்றால் அதுபற்றி

மேற்படி இவ்வழக்கின் முதற்கட்ட விசாரணை மேற்கொண்ட சிவசக்தி என்பவருக்கு தான் தெரியும். மேற்படி மதிப்பீடு அறிக்கை வழங்கிய மதிப்பீட்டாளரை இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி மதிப்பீடு அறிக்கை இவ்வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கின் சாட்சிகளை சரிவர விசாரிக்காமல் உண்மைக்கு புறம்பாக இவ்வழக்கின் எதிரி மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.